# முதல்கட்ட மெட்ரோ ரயில் திட்டப் பணிகள் நிறைவு

சென்னை, பிப்.10: ஏஜி. டிஎம்.எஸ்- வண்ணாரப்பேட்டை இடையே மெட்ரோ ரயில் சேவையைப் பிரதமர் மோடி திருப்பூரில் இருந்து காணொலிக் காட்சி மூலமாக கொடியசைத்து தொடங்கிவைத்தார். இதன்மூலம் சென்னையில் முதல்கட்ட மெட்ரோ ரயில் திட்டப்பணிகள் முழுமையடைந்துள்ளன.

சென்னை போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில், சென்னை மெட்ரோ ரயில் திட்டப்பணிகள் கடந்த 2009-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. வண்ணாரப்பேட்டை முதல் விமான நிலையம் வரையிலான 23 கி.மீ. தூரத்துக்கு முதல் வழித்தடத்திலும், சென்ட்ரல் முதல் பரங்கிமலை வரை 22 கி.மீ. தூரத்துக்கு 2-ஆவது வழித்தடத்திலும் மெட்ரோ ரயில் சேவைக்கான பணிகள் நடைபெற்று வந்தன. மொத்தம் 45 கி.மீ. தூரத்துக்கு மெட்ரோ ரயில் பாதை அமைக்கும் திட்டத்தில் ஏற்கெனவே 35 கி.மீ. தூரத்துக்கு பணிகள் முடிவடைந்து ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

முதல் மெட்ரோ ரயில் சேவை: கோயம்பேடு - ஆலந்தூர் வரையில் 10 கி.மீ. தூரத்துக்கு மெட்ரோ ரயிலின் முதல் சேவை கடந்த 2015-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதன்பிறகு படிப்படியாக மெட்ரோ ரயில் பணிகள் முடிவடைந்து 35 கி.மீ. தூரத்துக்கு மெட்ரோ ரயில் சேவை நடைபெற்று வந்தது. அதாவது, சென்ட்ரலில் இருந்து விமான நிலையம் வரையிலும், விமான நிலையத்தில் இருந்து தேனாம்பேட்டை வரையிலும் ரயில் போக்குவரத்து நடைபெற்று வந்தது.



டி.எம்.எஸ். -வண்ணாரப்பேட்டை இடையே மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்பட்ட நிலையில் அதில் பயணம் மேற்கொண்ட மத்திய வீட்டு வசதி - நகர்ப்புற விவகாரங்களுக்கான இணையமைச்சர் ஹர்தீப் சிங் பூரியுடன் தமிழக அமைச்சர்கள்ஜெயக்குமார், சம்பத், சரோஜா மற்றும் மெட்ரோ ரயில் நிர்வாக அதிகாரிகள்.

விமானநிலையம்-வண்ணாரப்பேட்டை வழித்தடத்தில், ஏஜி. டிஎம்.எஸ்.-இல் இருந்து வண்ணாரப்பேட்டை வரையிலான 10 கி.மீ. தூரம் கொண்ட மீதம் உள்ள வழித்தடத்தில் சுரங்கப்பாதை, ரயில் நிலையங்களில் கட்டுமானம், சிக்னல்கள் அமைக்கும் பணிகள் நிறைவடைந்து, போக்குவரத்துக்கு தயார் நிலையில் இருந்தது.

இந்நிலையில், ஏஜி. டிஎம்.எஸ்.-வண்ணாரப்பேட்டை இடையேயான புதிய வழித்தடத்தில் மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் மோடி திருப்பூரில் இருந்து காணொலிக் காட்சி மூலம் கொடியசைத்து தொடங்கிவைத்தார். பிரதமர் மோடி காணொலிக் காட்சி மூலமாக மெட்ரோ ரயில் சேவையை கொடியசைத்து தொடங்கிவைத்தவுடன் சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து வண்ணாரப்பேட்டைக்கு ரயில் சேவை தொடங்கியது. சென்ட்ரலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான இணை அமைச்சர் ஹர்தீப் சிங்புரி, தமிழக மீன்வளத் துறை அமைச்சர் டி.ஜெயக்குமார், தொழில் துறை அமைச்சர் எம்.சி.சம்பத் மற்றும் மெட்ரோ ரயில் நிர்வாக உயரதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இதன்மூலம் சென்னையில் முதல்கட்ட மெட்ரோ ரயில் திட்டப்பணிகள் முழுமையடைந்துள்ளன.

ஏஜி. டிஎம்.எஸ்.- வண்ணாரப்பேட்டை இடையே மெட்ரோ ரயில் வழித்தடத்தில், ஆயிரம் விளக்கு, எல்.ஐ.சி., அரசினர் தோட்டம், சென்ட்ரல், உயர்நீதிமன்றம், மண்ணடி, வண்ணாரப்பேட்டை ஆகிய 7 நிலையங்கள் உள்ளன.

**32 ரயில் நிலையங்கள்:** முதல் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் 10 குளிர்சாதன வசதி சுரங்கப்பாதை ரயில் நிலையங்கள், 13 உயர்த்தப்பட்ட ரயில் நிலையங்கள் என்று 32 ரயில் நிலையங்கள் உள்ளன. பயணிகள் பாதுகாப்புக்காக நடைமேடை, திரைக்கதவுகள் உள்ளிட்ட பல்வேறு பாதுகாப்பு அம்சங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## வடசென்னைக்கு கிடைத்த வரப் பிரசாதம்

ஏ.ஜி. டி.எம்.எஸ். -வண்ணாரப்பேட்டை இடையே வழித்தடத்தில் மெட்ரோ ரயில்சேவை தொடங்கியுள்ளநிலையில், பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

வடசென்னையைச் சேர்ந்த முகமது (51) கூறியது: உலகத் தரத்தில் மெட்ரோ ரயில் சேவை அளிக்கப்படுகிறது. வண்ணாரப்பேட்டை- விமானநிலையம் வரை மெட்ரோ ரயில் சேவை ஏற்படுத்தியுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. மெட்ரோ ரயில் சேவை வடசென்னைக்கு கிடைத்த வரப்பிரசாதம் என்றார் அவர்.

தேனாம்பேட்டையைச் சேர்ந்த கோவிந்தசாமி(60) கூறியது: வண்ணாரப்பேட்டை- விமானநிலையம் வரை மெட்ரோ ரயிலில் குறைவான கட்டணத்தில் பயணம் செய்வது மகிழ்ச்சியான விஷயம். ரயில் நிலையங்கள் சுத்தமாக இருக்கிறது. கட்டணத்தை மேலும் குறைத்தால் தரம் குறைந்துவிடும். எனவே, கட்டணத்தை மேலும் குறைக்கக்கூடாது என்றார் அவர்.

## இன்று இலவச பயணம்

ஏஜி. டிஎம்.எஸ்- வண்ணாரப்பேட்டை இடையே வழித்தடத்தில் மெட்ரோ ரயில் சேவை தொடங்கியுள்ள நிலையில், மெட்ரோ ரயிலில் பொதுமக்கள் திங்கள்கிழமை இலவசமாக பயணிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, சென்னை மெட்ரோ ரயில் நிலையத்தில் அனைத்து வழித்தடத்திலும் பொதுமக்கள் திங்கள்கிழமை (பிப்.11) இரவு வரை இலவசமாக பயணிக்கலாம் என்று மெட்ரோ ரயில் நிர்வாகம் அறிவித்துள்ளது.